# திண்டுக்கல் மாநகராட்சி

## 2016 – 17ம் ஆண்டின் நிர்வாக அறிக்கை

## திண்டுக்கல் மாநகராட்சி

## 2016–2017 ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை

### 1. அமைப்பும் நிர்வாகமும்

திண்டுக்கல் மாநகராட்சி 1.11.1866ம் நாள் தோற்றுவிக்கப்பட்டு, 23.1.1988ந் தேதிய நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 149 எண்ணிட்ட அரசாணையின்படி 1.4.1988ந் தேதி முதல் சிறப்பு நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டு இயங்கி வந்தது. அரசாணை எண். 25, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (தேர்தல் ) நாள் 17.2.2014.ன்படி கடந்த 19.02.2014 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு இயங்கி வருகிறது.

### 2. நிர்வாக எல்லை

திண்டுக்கல் மாநகராட்சியின் தற்போதைய மொத்த பரப்பு 14.01 சதுர கிலோ மீட்டராகும். 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இம்மாநகராட்சியின் மக்கள் தொகை 207225 ஆகும். இம்மாநகராட்சி 48 வார்டுகளாகப் பிரிக்கப்பட்டு, அதில் கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1) தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (பெண்) — 1 வார்டு எண். 44

2)தாழ்த்தப்பட்ட வகுப்பினர்(பொது) — 2 வார்டு எண்.26,27

3)பெண்களுக்கென ஒதுக்கீடு செய்ப்பட்டது — 15 வார்டுகள்

( 1, 3, 6, 10 ,13, 18, 21, 22, 24, 25 29, 34, 37, 42, 43 )

4) பொது பிரிவினருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது — 30 வார்டுகள்
( 2, 4, 5, 7, 8, 9, 11, 12, 14, 15, 16, 17, 19, 20, 23, 28, 30
31, 32, 33, 35, 36, 38, 39, 40, 41, 45, 46 ,47 மற்றும் 48)

மேற்கண்ட விபரப்படி பெண்களுக்கென மொத்தம் 16 வார்டுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது)

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் S.O No.45/2011/TNSCE/ME-1 Dated 21 September 2011 உத்திரவின்படி 2011.ம் ஆண்டு நடைபெற்ற நகர்மன்றத் தேர்தலில் திரு.வி.மருதராஜ் அவர்கள் நகர்மன்றத்தலைவராக

தேர்ந்தெடுக்கப்பட்டு, 19.2.2014 முதல் மேயராகவும், கீழ்க்கண்ட 48 நகர்மன்ற உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு 25.10.2011.ம் நாள் முதல் செயல்பட்டு வருகின்றார்கள். 29.10.2011ம் நாளன்று நடைபெற்ற தேர்தலில் திரு. பி.ஜி.துளசிராம் (வார்டுஎண்.36) அவர்கள் நகர்மன்றத் துணைத் தலைவராகவும் 21.11.2011 ம் நாளன்று நடைபெற்ற தேர்தலில் திரு.ஆ.சுப்பிரமணி (வார்டுஎண்.5) அவர்கள் நியமனக்குழு உறுப்பினராகவும் திரு.என்.அப்துல்ரஉறீம் (வார்டுஎண்.41) அவர்கள் ஒப்பந்தக்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி வருகின்றார்கள்.

திரு.எஸ்.தண்டபாணி (வார்டுஎண்.20) திரு.எஸ்.சேவியர் (வார்டுஎண்.46) திருகோ.திருமாறன்(வார்டுஎண்.2) மற்றும் திரு.ஆர்.வி.ராஜேந்திரன் (வார்டுஎண்.40) ஆகிய நகர்மன்ற உறுப்பினர்கள் மேல்முறையீட்டுக் குழு உறுப்பினர்களாகவும் பணியாற்றி வருகின்றார்கள்.

மேற்படி நகர்மன்றத் தலைவர், நகர்மன்ற துணைத் தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து முறையே மேயர், துணை மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்களாக இயங்கி வருகின்றனர்.

| வார்டு எண் | மாமன்ற உறுப்பினர்களின் பெயர் | வார்டு எண் | மாமன்ற உறுப்பினர்களின் பெயர் |
|---|---|---|---|
| 1 | திரு.ஜெ.முத்துலெட்சுமி | 25 | திருமதி.என்.சியாமளாதேவி |
| 2 | திரு. கோ. திருமாறன் | 26 | திரு.இரா.ரமேஷ்குமார் |
| 3 | திருமதி. மா.சாந்தா | 27 | திரு.சோ.இளையகுமார் |
| 4 | திரு.சோ. சுருளிவேல் | 28 | திரு.எஸ்.ஆர்.ராமமூர்த்தி |
| 5 | திரு.ஆ.சுப்பிரமணி | 29 | திருமதி.ஆர்.சாவித்திரி |
| 6 | திரு.சி.நாகலெட்சுமி | 30 | திரு.ஆர்.விஜயகுமார் |
| 7 | திரு.ரா.சக்திவேல் | 31 | திரு.டி.ராஜன் |
| 8 | திரு.பி.ராமலிங்கம் | 32 | திரு.ஏ.ஜான்பீட்டர் |
| 9 | திரு.பி.ராஜீ | 33 | திரு.கே.அழகர்சாமி |
| 10 | திருமதி.கி.மாரியம்மாள் | 34 | திருமதி.எம்.தனலெட்சுமி |
| 11 | திரு.எஸ்.குருநாதன் | 35 | திரு.எம்.முகமதுரபீக் |
| 12 | திரு.ரா.ஆனந்த் | 36 | திரு.பி.ஜி.எம்.துளசிராம் |
| 13 | திருமதி.சி.சரோஜா | 37 | திருமதி.ஏ.வசந்தி |
| 14 | திரு.ஜி.தனபாலன் | 38 | திரு.ஏ.முகமது இஸ்மாயில் |
| 15 | திரு.எம்.நாகராஜன் | 39 | திரு.எஸ்.முகமதுஇப்ராகிம் |
| 16 | திருமதி.ஏ.முகமது சித்திக் | 40 | திரு.ஆர்.வி.ராஜேந்திரன் |
| 17 | திரு.எஸ்.ராஜப்பா | 41 | திரு.என்.அப்துல்ரஉறீம் |
| 18 | திருமதி.ஜா .ஜெயந்தி | 42 | திரு.கே.பாத்திமா |
| 19 | திரு.ஜி.சந்திரமோகன் | 43 | திரு.எஸ்.ரோணிக்கம் |
| 20 | திரு.எஸ்.தண்டபானி | 44 | திருமதி.எஸ்.விஜயா |
| 21 | திருமதி.வி.வசந்தா விஜயகுமார் | 45 | திரு.ஏ.மார்த்தாண்டம் |
| 22 | திருமதி.பா.செல்வமணிபாலுச்சாமி | 46 | திரு.எஸ்.சேவியர் |
| 23 | திருஎஸ்.ஜான்பீட்டர். | 47 | திரு.ஆர்.குலோத்துங்கன் |
| 24 | திருமதி.எம்.வகிதாபானு | 48 | திரு.எஸ்.சேகர். |

மேற்படி 48 மாமன்ற உறுப்பினர்களில வார்டு எண் 9 மாமன்ற உறுப்பினர் திரு. பி.ராஜீ, ( இந்திய தேசிய காங்கிரஸ்) அவர்கள் காலஞ்சென்றதைத் தொடர்ந்து மேற்படி வார்டுக்கான மாமன்ற உறுப்பினர் பதவிக்கு திரு. பால்பாண்டி என்பவர் தேர்ந்தெடுக்கப்ட்டு மாமன்ற உறுப்பினராக பதவி வகித்து வந்தா. மேற்படி 48 மாமன்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் 25.10.2016 உடன் நிறைவடைந்ததை தொடர்ந்து அரசாணையின்படி மாமன்ற தனி அலுவலராக இம்மாநகராட்சி ஆணையர் திரு. ந.மனோகர் எம்.ஏ.எம்.பி.ஏ., அவர்கள் பதவி வகித்து வருகின்றார். இடைத் தேர்தல் நடத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

## 3. பணியாளர்கள்

1.4.2016 முதல் 31.3.2017 வரை கீழேக் கண்டவர்கள் ஆணையர்களாகவும், துறைத் தலைவர்களாகவும் பணிபுரிந்துள்ளனர்.

| 1 | பதவி | பெயர்<br>( திருவாளர்கள் ) | பணிபுரிந்த காலம் |
|---|---|---|---|
| 1. | ஆணையாளர் | திரு. ந.மனோகர் | 01.04.2016 முதல் 31.3.2017 |
| 2 | செயற்பொறியாளர் | சி.கணேசன் | 01.04.2016 முதல் 31.3.2017 |
| 3 | மாநகர்நல அலுவலர் | மரு.எம். அனிதா | 01.04.2016 முதல் 31.3.2017 |
| 4 | முதுநிலை நகரமைப்பு அலுவலர் | கோபாலகிருஷ்ணன் | 01.04.2016 முதல் 31.3.2017 |
| 5 | கண்காணிப்பாளர் | எஸ்.வில்லியம் சகாயராஜ் | 01.04.2016 முதல் 31.3.2017 |
| 6 | உதவிவருவாய் அலுவலர்(பொ) | ஜி. சாரங்க சரவணன் | 01.04.2016 முதல் 31.3.2017 |

## 4. கூட்டங்கள்

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 28 வது பிரிவின் கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளின்படி மொத்தம் 22 கூட்டங்கள் நடைபெற்றன. இதில் இயல்பு கூட்டங்கள் 11, அவசரக் கூட்டங்கள் 11 மற்றும் சிறப்புக் கூட்டங்கள் இல்லை.

பொதுவாக ஒவ்வொரு நகர மன்றக்கூட்டத்திலும் வைக்கப்பட்ட பொருள்கள் அந்தந்த மன்றக் கூட்டத்திலேயே முடிவு செய்யப்பட்டுள்ளது. அறிக்கையாண்டில் மொத்தம் 685 பொருட்கள் முடிவு செய்யப்பபட்டுள்ளன.

148 வருடங்களை கடந்து 150.வது ஆண்டினை நெருங்கிக் கொண்டிருந்த இச்சிறப்புநிலை நகராட்சியினை அருகில் உள்ள கிராமங்களுடன் சேர்த்து மாநகராட்சியாக தரம் உயர்த்தி அரசாணை எண். 25, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (தேர்தல் ) நாள் 17.2.2014.ன்படி கடந்த 19.02.2014 முதல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு இயங்கி வருகிறது.

## 5. மேலாளுகை

அறிக்கையாண்டில் மாநகராட்சி ஊழியர்களுக்கு 2016–17ம் ஆண்டு செலவு ரு. 1836.15 இலட்சம். இச் செலவினம் கடந்த ஆண்டு ரூ. 1726.82 இலட்சம் ஆகியுள்ளது. ஊழியர்களை தண்டிக்கும் விதிளை கடைப்பிடிப்பதில் குறையேதும் ஏற்படவில்லை. அறிக்கையாண்டில் அச்சுக் கூலியாகவும் எழுது பொருட்கள் வாங்கவும் செலவிடப்பட்ட தொகை ரூ. 67,32,355/– ஆகும்.

## 6. வழக்குகள்

அறிக்கையாண்டு முழுவதும் திரு. எஸ். ஜெகநாதன், இந்நகர் மன்ற வழக்கறிஞராக பணியாற்றியுள்ளார்.

| | |
|---|---|
| 1.4.2016ம் தேதியன்று நிலுவையிலுள்ள வழக்குகள் | 75 |
| அறிக்கையாண்டில் பெறப்பட்ட வழக்குகள் | 13 |
| மொத்தம் | 88 |
| 31.3.2017 முடிய முடிவு பெற்ற வழக்குகள் | 15 |
| 1.4.2017 ல் நிலுவையிலுள்ள வழக்குகள் | 103 |

## பொறியியல் பிரிவு

## 7. பொறியியல் இலாகா பணிகள்

சாலைகள் அமைத்தல், கட்டிடங்கள் கட்டுதல், குடிநீர் வழங்குதல் வடிகால்வேலைகள், தெரு விளக்குகள், பூங்காக்கள், தோட்டங்கள் சம்பந்தப்பட்ட பராமரிப்பு வேலைகள் முக்கியமானதாகும்.

## 8. இலாகா பணியாட்கள்

இம்மாநகராட்சி பொறியியல் பிரிவில் பணிபுரியும் பணியாளர்கள் மூன்றுவகைப்படுவர்.

1. பொது மராமத்து பணியாளர்கள்
2. குடிநீர் விநியோக பணியாளர்கள்.
3. பாதாள சாக்கடைத் திட்டம்

<u>பொது மராமத்து பிரிவு பணியாளர்கள் எண்ணிக்கை விபரம் பின்வருமாறு</u>

| | |
|---|---|
| செயற்பொறியாளர் | 1 |
| உதவிப் பொறியர்கள் | 2 |
| பட வரைவாளர் | 1 |
| பணி ஆய்வர்கள் | 2 |
| மின் பணியாளர்கள் | 6 |
| மின் பணி உதவியாளர்கள் | 5 |

<u>அமைச்சுப்பணியாளர்கள்</u>

| | | |
|---|---|---|
| 1 | உதவியாளர் | 1 |
| 2 | இளநிலை உதவியாளர் | 2 |
| 3 | பதிவு எழுத்தர் | – |
| 4 | அலுவலக உதவியாளர் | 1 |
| 5 | காவலர் | – |

<u>குடிநீர் விநியோகப் பணியாளர்கள் எண்ணிக்கை.</u>

| | | |
|---|---|---|
| 1 | உதவிப் பொறியாளர் | – |
| 2 | குடிநீர் விநியோக தலைமை நிலைய கண்காணிப்பாளர் | 1 |
| 3 | குழாய் ஆய்வர்கள் | – |
| 4 | குடிநீர் குழாய் பொருத்துநர் (முதல் நிலை ) | 1 |
| 5 | குடிநீர் குழாய் பொருத்துநர்கள் (இரண்டாம் நிலை) | 6 |
| 6 | மின் பணியாளர் (முதல் நிலை ) | 1 |
| 7 | மின் பணியாளர்கள் (இரண்டாம் நிலை ) | 3 |
| 8 | வடிதொட்டி இயக்குபவர்கள் | – |
| 9 | நீரேற்று நிலைய துலக்குநர்கள் | 13 |
| 10 | காவலர்கள் | 2 |
| 11 | தண்ணீர் லாரி ஓட்டுநர்கள் | 7 |
| 12 | மின் பணி கண்காணிப்பாளர் (இரண்டாம் நிலை) | 1 |
| 13 | மறைதிருகாளர்(Turn Cock) | 3 |

<u>பாதாள சாக்கடைத் திட்டம்</u>

| | | |
|---|---|---|
| 1 | செயற்பொறியாளர் | 1 |
| 2 | உதவி செயற்பொறியாளர் | 2 |
| 3 | உதவிப் பொறியாளர் | 4 |
| 4 | இளநிலை பொறியாளர் | – |
| 5 | கணக்கர் | – |
| 6 | உதவியாளர் | 1 |

**9. சாலைகள்**

மாநகராட்சி எல்லைக்குள் இருக்கும் சாலைகள் நெடுஞ்சாலை துறையினராலும், மாநகராட்சியினாலும் பராமரிக்கப்படுபவை என இருவகைகளாக பாகுபடுத்தப்பட்டுள்ளன.

மாநகராட்சி எல்லைக்குள் நெடுஞ்சாலைத்துறையினரால் பராமரிக்கப்பட்டு வரும் சாலைகளின் மொத்த நீளம். 27.00 கீ.மீ.

நடப்பு ஆண்டில் மாநகராட்சியில் பராமரிக்கப்பட்டு வரும் சாலைகளின் மொத்த நீளம் 181.733 கீ.மீ. அதன் விபரம் பின்வருமாறு.

அ. தார்சாலைகள் ........................................................................ **148. 311 கீ. மீ**

ஆ. சிமிண்ட் சாலைகள்.................................................................. **24. 070 கீ.மீ**

இ. மண்சாலை.................................................................................. **9.352 கீ.மீ**

..............................................

மொத்தம் **181. 733 கீ.மீ**

..............................................

சென்ற ஆண்டில் மாநகராட்சியில் பராமரிக்கப்பட்ட சாலைகளின் மொத்த நீளம் 181.733 கீ.மீ., கடந்த மூன்று ஆண்டுகளில் இந்தஇனத்தின்கீழ் செலவிடப்பட்ட தொகை பின்வருமாறு

| | |
|---|---|
| 2013–2014 | ரூ. 285. 32 லட்சம் |
| 2014–2015 | ரூ. 892.47 லட்சம் |
| 2015–2016 | ரு. 1024.22 லட்சம் |

மாநகராட்சிக்கு சொந்தமாக கற்பாறைகள் ஏதும் இல்லை. நகரில் முதன்மையான சாலைகள் போதுமானஅளவு அகலம் உள்ளதாகவே இருக்கிறது.

அனுமதியின்றி நிறுவப்பட்ட வரை கடப்புகள் மாநகராட்சியில் அவ்வப்பொழுது அகற்றப்பட்டுவருகிறது. முக்கியமான சாலை சந்திப்புகளில் போக்குவரத்து இடையூறுகள் இல்லாமல் இருக்க அவ்வப்பொழுது தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகிறது.

தமிழக அரசின் மானியத்தைக் கொண்டு 2016– 2017ம் ஆண்டில் கீழ்க்கண்ட பட்டியலில் உள்ள பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்றப்பட்ட திட்டப்பணிகள்

| வ.எண் | திட்டத்தின் பெயர் | ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை. ரூ. லட்சத்தில். | எடுத்துக்கொள்ளப் பட்ட பணிகளின் எண்ணிக்கை | செலவுத் தொகை ரூ. லட்சத்தில். |
|---|---|---|---|---|
| 1 | சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி | 72.00 | 8 | 66.93 |
| 2 | கல்வி நிதி | 150.00 | 3 | 22.99 |

## 10. பொறியியல் கருவிகள்

அறிக்கையாண்டில் பொறியியல் பிரிவில், கீழ் குறிப்பிட்டபடி வாகனங்கள் பராமரிக்கப்பட்டன.

### குடிநீர் வாகனங்கள்

1. டி.என்.57–ஏ–3210
2. டி.என்.57–எச்–3129
3. டி.என்.57–ஏ–2782
4. டி.என்.57–ஏ–2186

கீழ்க்கண்டவாறு இதர வாகனங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது

1. டி.என்.57–0444
2. டி.என்.57.எச்.3034
3. டி.என்.57.டி.9018
4. டி.என்.57. பி.6161

## 11. தெருவிளக்குகள் பராமரிப்பு

இம்மாநகராட்சி மூலம் பராமரிக்கப்பட்டு வரும் மின் விளக்குகள் விபரம்.

| | | |
|---|---|---|
| 1 | சோடியம் ஆவி விளக்குகள் | 751 |
| 2 | 250 வாட்ஸ் மெட்டல் உறாலைடு விளக்குகள் | 147 |
| 3 | 40 வா ட்ஸ் குழல் விளக்குகள் | 4705 |
| 4 | உயர் மின் விளக்கு கோபுரம் | 180 |
| 5 | சி.எப்.எல்.விளக்குகள் | 957 |
| | மொத்தம் | 6740 |

தெரு விளக்கு பராமரிப்பு பிரிவில் 6 மின் கம்பி பணியாளர்கள் 5 மின்கம்பி உதவியாளர்கள் பணியாற்றி வருகிறார்கள். அறிக்கையாண்டில் இப்பணியாளர்கள் ஊதியம் வழங்கிய வகையில் ரூ. 9781402/—செலவிடப்பட்டுள்ளது.

அறிக்கையாண்டில் தெரு விளக்குகள் பராமரிப்பு செலவு மின் கட்டணம் மற்றும் புதிய மின் விளக்குகள், உதிரிச்சாமான்கள் மற்றும் பொறுப்புத் தொகை செலுத்தப்பட்ட வகையில் செலவு ரூ. 9781402 / ஆகும். நிர்ணயிக்கப்பட்டபடி தேவைப்பட்ட இடங்களுக்கு டியூப் லைட் மற்றும் ஸ்டாட்டர் 6 மாதத்திற்கு ஒரு முறை மாற்றப்பட்டு வருகின்றது.. குழல்விளக்கு சோக் ஒருவருடத்திற்கு ஒரு சோக் மாற்றப்படுகின்றது. சோடியம் ஆவிவிளக்கு 1 1/2வருடத்திற்கு ஒரு சோடியம் விளக்கு மாற்றப்படுகின்றது. சோடியம் விளக்கு சோக் 2 வருடத்திற்கு ஒரு சோக் மாற்றப்படுகின்றது.

## 12 சிறு பாலங்கள், வடிகால்கள் பராமரிப்பு

பொதுவாக திண்டுக்கல் மாநகரில் பல பகுதிகளில் கழிவு நீர் வடிகால்கள் மற்றும் மழைநீர் வடிகால்கள் உள்ளது. மழை நீரை கடத்தி செல்ல தெரு சந்திப்புகளில் சிறு பாலங்கள் கட்டப்பட்டுள்ளது. இவைகள் மாநகராட்சியில் பராமரிக்கப்பட்டு வருகின்றன

## 13. பயணியர் விடுதி

அறிக்கையாண்டில் 2ம் நிலை பயணியர் விடுதி நன்கு பராமரிக்கப்பட்டது. மேற்படி விடுதியில் கீழே இரண்டு அறைகளும், முதல் தளத்தில் இரண்டு அறைகளும் உள்ளது. இவற்றை தவிர 7 அறைகள் கொண்ட சத்திரம் ஒன்று இருந்ததை மாநகராட்சி அலுவலர்களின் குடியிருப்பாக மாற்றப்பட்டு 1.6.77 முதல் நகராட்சி ஊழியர்களுக்கு வீட்டு வாடகைக்கு விடப்பட்டுள்ளன. பயணியர் விடுதி இந்நகருக்குள் வரும் நடுத்தர மக்களுக்கும் , அரசு அலுவலர்களுக்கும் மிக்க பயன் உள்ளதாக இருந்தது. முக்கிய பிரமுகர்கள், பல்துறை அலுவலர்கள் மற்றும் ஆய்வு அலுவலர்கள் தங்க உதவியாக இருந்து வந்தது.

## 14. இட வசதியும், கருவிகளும்

இம்மாநகராட்சியில் மேல்நிலைப்பள்ளி ஒன்றும், மாநகராட்சி உயர்நிலைப்பள்ளி ஒன்றும் மற்றும் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி ஒன்றும் மற்றும் மாநகராட்சி துவக்கப்பள்ளிகள் 14.ம் செயல்பட்டு வருகின்றது. அதில் 16 பள்ளிகள் மாநகராட்சி கட்டிடத்திலும் ஒரு பள்ளி மட்டும் வாடகை கட்டிடத்திலும் (நாகல்புதூர் மாநகராட்சி துவக்கப்பள்ளி) செயல்பட்டு வருகின்றது.

மேலும் 1.4.1990 முதல் நகராட்சிப்பள்ளிகள் நிர்வாகம் அனைத்தும் கல்வித்துறையினரால் நடத்தப்பட்டு வருகின்றது

## 15. பூங்காக்கள், அரங்குகள்

மாநகராட்சி பயணியர் விடுதியிலும், மலைக் கோட்டை அருகிலும் பூங்காக்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இந்நகரில் உள்ள குமரன்பூங்கா கண்ணைக் கவரும் விதத்திலும், சிறுவர் சிறுமியர்களை கவரும் வகையில் குமரன் பூங்கா வடிவிலும், அமைப்பிலும் அழகுற அமைக்கப்படவும், பூங்காவிற்குத் தேவையான விளையாட்டு சாதனங்கள் மற்றும் எல்லா மக்களையும் கவர்ந்திழுக்கும் வகையில் கண் கவர் சிலைகள்

திண்டுக்கல் நகர் நன்கொடையாளர்கள் மூலம் நிறுவப்பட்டது .பூங்கா நுழைவுக் கட்டணமாக பெரியவர்களுக்கு ரூ.3/ ம் சிறியவர்களுக்கு ரூ.2 /– ம் வசூல் செய்யப்பட்டு வருகின்றது. இப்பூங்கா பொது மக்களை வெகுவாக கவர்ந்துள்ளதுடன், பொழுது போக்கிற்கு உதவிடும் வகையில் உள்ளது. தற்போது இப்பூங்காவில் பராமரிப்பு மற்றும் மராமத்துப் பணிகள் செய்யப்பட உள்ளது.

## 16. சத்துணவுத் திட்டம்

திண்டுக்கல் மாநகராட்சியின் கீழ் 17 நகராட்சி ஆரம்பப் பள்ளிகளிலும், 1982ம் ஆண்டு முதல் ஏழை மாணவ மாணவியர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. 1984ம் ஆண்டு முதல் இத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டு நகராட்சி உயர்நிலைப்பள்ளி மற்றும் நேருஜி நினைவு நகராட்சி மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கும் மதிய உணவு திட்டத்தின்கீழ் உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றது.

திண்டுக்கல் மாநகராட்சியில், தமிழ்நாடு அரசு சத்துணவுத் திட்டத்தின் கீழ் 14 நகராட்சி ஆரம்பப்பள்ளி, ஒரு நகராட்சி நடுநிலைப்பள்ளி, மேட்டுப்பட்டி நகராட்சி உயர்நிலைப்பள்ளி மற்றும் நேருஜி நினைவு நகராட்சி மேல்நிலைப்பள்ளி ஆக மொத்தம் 17 பள்ளிகளில் இத்திட்டம் செயல்பட்டு வருகின்றது. அறிக்கையாண்டில் இப்பணி சிறப்பாக நடைபெற 7 அமைப்பாளர்கள், 14 சமையல்கள், 8 சமையலர் உதவியாளர்கள் ஆக மொத்தம் 29 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றார்கள். சத்துணவு வழங்கும் திட்டத்திற்காக அறிக்கையாண்டில் ரூ.30,96,760/– செலவழிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் ரூ.29,35,265/– செலவழிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் தினசரி பயனடைந்த மாணவ மாணவியர்கள் எண்ணிக்கை 1164 ஆகும். மேலும் அரசாணை (நிலை) எண்.20, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம் (ச.உ.தி–2) துறை நாள் 12.9.2001 ல் இத் திட்டத்தின் கீழ் வாரத்திற்கு ஐந்து முறை முட்டைகளும், ஒவ்வொரு மாணவ மாணவியருக்கும் வாரம் ஒரு முறை வெள்ளிக் கிழமையில் உருளைக்கிழங்கு வேகவைத்தும், வாரம் ஒரு நாள் செவ்வாய்கிழமையில் பாசிப்பயறு மற்றும் வாரம் இருமுறை கொண்டை கடலையும் வேகவைத்து வழங்கப்பட்டு வருகின்றது.

## 17 மருந்தகங்கள்

இம்மாநகராட்சியில் அறிக்யைாண்டிலும் 4 மருந்தகங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றது. சித்த வைத்திய முறை மருந்தகங்கள் மூன்றும், ஆயுர்வேத முறையில் ஒன்றும் ஆக மொத்தம் 4 மருந்தகங்கள் கீழே குறிப்பிட்டுள்ள இடங்களில் நகராட்சியில் தொடர்ந்து பராமரிக்கப்பட்டும் வருகின்றது.

1. பேருந்து நிலையம் வாட்டர் டேங்க் அருகில்
2. பாலகிருஷ்ணாபுரம் நகராட்சி மருந்தகம்
3. பழனிரோடு நகராட்சி மருந்தகம்
4. பேகம்பூர் நகராட்சி மருந்தகம்

முதல் மூன்றும் சித்த வைத்திய முறை மருந்தகங்கள் பேகம்பூரில் உள்ள நகராட்சி மருந்தகம் ஆயுர்வேத முறையிலும் மருத்துவம் பார்க்கப்படுகின்றது. மேற்படி மருந்தகங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு மருத்துவ அலுவலர், ஒரு மருந்தாளுநர், ஒரு பெண் செவிலியர் , உதவியாளர்

மற்றும் ஒரு ஆண் செவிலியர் உதவியாளர்களும் பணியாற்றுகின்றார்கள். அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட பணியாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

| வரிசை எண் | மருந்தகம் | மருத்துவ அலுவலர் | மருந்தாளுனர் | ஆண் செவிலிய உதவியாளர் | பெண் செவிலிய உதவியாளர் | சுத்தம் செய்யும் உதவியாளர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | பேருந்துநிலையம் வாட்டர்டேங்க் அருகில் | – | – | – | – | 1 |
| 2 | பழனிரோடு மருந்தகம் | 1 | 1 | – | 1 | – |
| 3 | ரவுண்ட்ரோடு புதுாா மருந்தகம் | 1 | 1 | – | – | – |

## 18.நோயாளிகள்

அறிக்கையாண்டில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை 65652 ஆகும் ஒவ்வொரு மருந்தகத்திலும் சிகிச்சை பெற்றவர்களின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| வ.எண் | மருந்தகத்தின் பெயர் | சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பேருந்துநிலையம் வாட்டர் டேங்க் அருகில் | 16200 |
| 2 | பழனிரோடு மருந்தகம் | 21340 |
| 3 | பேகம்பூர் மருந்தகம் | 8123 |
| | மொத்தம் | 12123 |

கடந்த ஆண்டில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை 63200 ஆகும்
நடப்பு ஆண்டில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை 58652 ஆகும்

## 19 இட வசதியும் கருவிகளும்

மேற்கண்ட மருந்தககங்கள் யாவும் சொந்தக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றது. மருந்தகங்களுக்கு தேவையான துணைக்கருவிகள் போதுமானவையாக இருந்தது. அனைத்து மருந்தகங்களுக்கும் தேவையான மருந்துகள் அவ்வப்பொழுது நகராட்சி மூலம் வாங்கி வழங்கப்பட்டது. அறிக்கையாண்டில் 4 மருந்தகங்களை பராமரிக்கவும் மற்றும் மருந்தகப்பணியாளர்களுக்கு ஊதியச்செலவும் , கீழ்க்கண்டவாறு செலவிடப்பட்டுள்ளது.

| ஆண்டு | செலவிப்பட்ட தொகை |
|---|---|
| 2013–2014 | ரூ.36,08,410/– |
| 2014–2015 | ரூ.46,08,510/ |
| 2015–2016 | ரூ.55,06,820/– |

## 20. மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலம்

இம்மாநகராட்சியால் 5 தாய் சேய் நலவிடுதிகளை கீழ்க்கண்ட இடங்களில் தொடர்ந்து நடத்தி வருகிறது.

| | |
|---|---|
| 1 | நகராட்சி அலுவலகத்தின் பின்றபுற முள்ள கமலா நேரு மகப்பேறு இல்லம் |
| 2 | மேட்டுப்பட்டி நகராட்சி மகப்பேறு இல்லம் |
| 3 | நாகல் நகர் நகராட்சி மகப்பேறு இல்லம் |

இதில் கமலா நேரு மகப்பேறு இல்லம் சுமார், 1.37 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டு 61 படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளது. அறுவை சிகிச்சை கூடம் கட்டப்பட்டு அறுவைச்சிகிச்சை பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மற்றும் நாகல்நகர் தாய்சேய் நலவிடுதியில் 20 படுக்கைகளும் மேட்டுப்பட்டி தாய்சேய் நலவிடுதியில் 20 படுக்கைகளும், கமலா நேரு தாய் சேய் நல விடுதியில் 10 படுக்கைகளும் பராமரிக்கப்பட்டு வருகிறது. தாய் சேய் நலவிடுதிகளை பராமரிக்க சென்ற ஆண்டு செலவு (பணியாளர்கள் ஊதியம் உள்பட) ரூ.62,90,740/– அறிக்கையாண்டில் மேற்கண்ட செலவு ரூ. 55,90,740 ஆகும்.

அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட அலுவலர்கள் பணியாற்றியுள்ளனர்.

| | | |
|---|---|---|
| 1 | பெண்மருத்துவ அலுவலர் | 1 |
| 2 | பகுதிநேர சுகாதார செவிலியர் | 1 |
| 3 | மகப்பேறுஉதவியாளர்கள் | 11 |
| 4 | பெண் துப்புரவாளர்கள் | 2 |
| 5 | அலுவலக உதவியாளர் | 1 |
| 6 | காவலர் | 1 |

## 21 தாய் சேய் நல விடுதி பராமரிப்பு செலவு

அறிக்கையாண்டில் மாநகராட்சி தாய் சேய் நல விடுதிகள் மூலம் 152 பிரசவங்கள் பார்க்கப்பட்டன. அறிக்கை ஆண்டில் பராமரிப்பு மான்யம் ஏதும் பெறவில்லை.

## 22. பிறப்பு மற்றும் இறப்பு விகிதம்

அறிக்கையாண்டில் மொத்தம் பதிவான பிறப்புகள் 9152. அவற்றில் ஆண்கள் 4791, பெண்கள் 4361. அறிக்கை ஆண்டில் பதிவான இறப்புகளின் எண்ணிக்கை 1871. இவற்றில்

ஆண்கள் 1192. பெண்கள் 679.

கீழ்காண் பல்வகை நோய் காரணங்களினால் இறப்புகள் எதும் இல்லை.

| | | |
|---|---|---|
| 1 | காசநோய் | 3 |
| 2 | நீரிழிவு (சர்க்கரை நோய்) | 0 |
| 3 | நிமோனியா விஷக் காய்ச்சல் | 0 |
| 4 | மஞ்சள் காமாலை | 12 |
| 5 | எய்ட்ஸ் நோய் | 6 |
| 6 | புற்று நோய் | 82 |
| 7 | இரத்த சோகை | 12 |
| 8 | மூளைக் காய்ச்சல் | 0 |
| 9 | இருதய நோய் மற்றும் மாரடைப்பு | 770 |
| 10 | மூளையில் கட்டி | 0 |
| 11 | இரத்தக் கொதிப்பு | 76 |
| 12 | பாம்புக் கடி | 0 |
| 13 | விஷ விதை சாப்பிட்டு | 32 |
| 14 | பூச்சிக் கொல்லி மருந்து | 3 |
| 15 | குறைப்பிரசவம் | 2 |
| 16 | சிசு மரணம் | 6 |
| 17 | மகப்பேறு மரணம் | 1 |
| 18 | புரை ஓடிய தொற்று | 0 |
| 19 | ஆஸ்துமா | 4 |
| 20 | நுரையீரல் நோய் | 2 |
| 21 | சாலை விபத்து | 62 |
| 22 | மூச்சு திணறல் | 5 |
| 23 | சிறுநீரகக் கோளாறு | 33 |
| 24 | வயோதிகம் | 205 |
| 25 | வயிற்றுப் புண் | 0 |
| 26 | தலைக் காயம் | 6 |
| 27 | பெரியம்மை, காலரா | 0 |
| 28 | தீக்காயம் | 24 |
| 29 | வாதநோய் | 12 |
| 30 | இதர காரணங்களால் | 381 |
| | | |

## 23. பெரியம்மை

2009–10 ம் ஆண்டிலிருந்து இம்மாநகராட்சியில் பெரியம்மை நோய் முற்றிலும் ஒழிக்கப்பட்டு தொடர் ஆண்டுகளில் பெரியம்மை ஏதும் இல்லை.

## 24. ஐந்தாவது இந்திய மக்கள் தொகை திட்டம் விரிவாக்கம் 2ன் கீழ் குடும்ப நலம் மற்றும் நகர்புற நலமையங்கள்

2001–2002.ல் அரசாணை எண்.136. நாள் 31.3.2001 ஆணைப்படி பொது சுகாதாரம் மற்றும் நல மையத்தை நகர்புற நல மையங்களாக மாற்றி அமைக்க உத்திரவிடப்பட்டுள்ளது. 5வது இந்திய மக்கள் தொகை திட்டமானது செயல்படுத்தப்பட்டு ஏழு மையங்களாக மாற்றி குடிசை வாழ் மக்களுக்கு சிறந்த முறையில் மருத்துவம் பார்க்க ஆவன செய்யப்பட்டது. மேட்டுப்பட்டி தாய் சேய் நல விடுதி மற்றும் கமலா நேரு தாய் சேய் நல விடுதி உலக வங்கி நிதியில் சீரமைப்பு செய்யப்பட்டது. மரியநாதபுரம் நகராட்சி பயணியர் விடுதி அருகில் நகர்நல மையம் புதிய கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

### நகர்ப்புற நலமையங்கள் இயங்கி வரும் இடங்கள்

1. கமலா நேரு மகப்பேறு மையம்
2. சவேரியார்பாளையம் நகர ஆரம்ப சுகாதார நிலையம்
3. பழனிரோடு நகர ஆரம்ப சுகாதார நிலையம்
4. மரியநாதபுரம் நகர ஆரம்ப சுகாதார நிலையம்
5. மேட்டுப்பட்டி மகப்பேறு இல்லம்
6. மரியநாதபுரம் (நகராட்சி பயணியர் விடுதி அருகில்)
7. கமலா நேரு நகர ஆரம்ப சுகாதார நிலையம்
8. நகர்நல மையம்– பழனி ரோடு ( சித்தா மருந்தக கட்டிடம்)

நகர்புறநல மையத்திட்டத்தின் கீழ் பணிபுரியும் அலுவலர்கள் விபரம்

| | | |
|---|---|---|
| 1 | மருத்துவ அலுவலர் | 5 |
| 2 | தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் | 1 |
| 3 | பகுதி சுகாதார செவிலியர் | 5 |
| 4 | பல்நோக்கு சுகாதார பணியாளர்கள் | 15 |
| 5 | கிளாஸ் 4 பெண் பணியாளர்கள் | 4 |

2016–2017.ம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சியில் நகர்புற நல மையத்தின் செயல்பாட்டிற்கு சென்னை குடும்ப நலத் துறை இயக்குநர் அவர்கள் அறுவை சிகிச்சை மற்றும் தற்காலிக குறியீடு 1600 நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இருந்த போதிலும் கடந்த ஆண்டை விட குடும்ப நலப்பணியில் சிறந்த முறையில் பணி முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலையங்கள் தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணி குறிப்பிட்ட எந்த அளவிற்கு அடைந்தனர் என்பதற்கு கீழே புள்ளி விபரங்கள் தரப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்ட பணியாளர்கள் இப்பணியோடு, தாய் சேய் நலப்பணி, மலேரியா காய்ச்சல் நரம்பு சிலந்தி மற்றும் பல்வேறு நோய் கண்டவர்களை கண்டறிந்து நேரில் சந்தித்து மருத்துவம் பார்த்து வருகின்றனர்.

## நகர்நலமையங்கள் அடைந்த இலக்கு

| வ.எண் | விபரம் | குறியீடு | அடைவு |
|---|---|---|---|
| 1 | ஆண்/பெண் அறுவை சிகிச்சை | 1600 | 950 |
| 2 | தாய்மார்களுக்கு கருத்தடை வளையம் பொருத்துதல் | 1000 | 550 |
| 3 | தாய்மார்களுக்கு கருத்தடை மாத்திரை வழங்குதல். | – | – |
| 4 | ஆண்களுக்கு நிரோத் வழங்குதல் | 500 | 430 |

இந்திய மக்கள் தொகை திட்டத்தின் கீழ் பணிபுரியும் இதர செலவினங்களுக்காக 2011–12ம் ஆண்டில் ரூ. 1,03,14,923/ மான்யத்தொகை பெறப்பட்டது.

## 25. நகர்ப்புற மலேரியா திட்டம் ( 1.4.2016 முதல் 31.3.2017)

திண்டுக்கல் மாநகராட்சியில் நகர்ப்புற மலேரியா திட்டம் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத் திட்டத்தில் கீழ்க்கண்ட அலுவலர்களும், பணியாளர்களும் பணி புரிந்து வருகின்றனர்.

| வ.எண் | பணியிட விபரம் | அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை | பணிபுரிபவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | துப்புரவு ஆய்வர் ( மலேரியா) | 1 | 1 |
| 2 | களப்பணி உதவியாளர் | 1 | 1 |
| 3 | ஜீப் ஓட்டுநர் | 1 | 0 |
| 4 | மலேரியா மஸ்துார்கள் | 20 | 19 |

இத் திட்டம் கீழ்க்கண்ட இரண்டு இலக்குகளை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.

1) கொசுத் தொல்லையைக் கட்டுப்படுத்துதல்
2) மலேரியா மற்றும் டெங்கு நோயை தடுத்தல், கட்டுப்படுத்துதல், குணப்படுத்துதல்
3) விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

### 1) கொசுத்தொல்லையை கட்டுப்படுத்துல்

கொசுக்களின் பெருக்கத்தை கட்டுப்படுத்த கொசு உற்பத்தியை தடுக்கும் பொருட்டு தேங்கியுள்ள சாக்கடைகளை சுத்தம் செய்யும் பணிகள் அந்தந்த பகுதி துப்புரவுப் பணியாளர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தேங்கியுள்ள சாக்கடைக் கழிவு நீரில் பேக்ட்டிசைடு என்ற கொசுப்புழு ஒழிப்பு மருந்தானது தெளிக்கப்படுகிறது. இந்த மருந்தானது கழிவு நீரில் மட்டுமே தெளிக்கப்படும். இதனால் கழிவு நீரில் உற்பத்தியாகும் கியூலெக்ஸ் என்ற கொசுவானது உற்பத்தியாகாமல் தடுக்கப்படுகிறது. தினமும் மதியம்

இதற்கொன பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தப் பகுதிகளில் கொசுப்புழு ஒழிப்பு மருந்து தெளிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**<u>2) மலேரியா, டெங்கு நோயைத் தடுத்தல்</u>**

மலேரியா, டெங்கு நோய் ஏற்படாமல் தடுப்பதற்கு அந்நோயைப் பரப்பும் அனாபிலஸ் மற்றும் ஏடிஸ் என்ற கொசுவின் உற்பத்தியை தடுக்க வேண்டும். இந்த கொசுவானது நல்லதண்ணீர் மற்றும் சிறிதளவு தேங்கும் தண்ணீர் ஆகிய இடங்களில் முட்டையிட்டு பெருகும் தன்மையுடையது. எனவே நகராட்சிப் பகுதி முழுவதும் வாரத்திற்கு ஒருமுறை அபேட் மருந்து தெளிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் வகையில் ஆறு நாட்கள் கொண்ட வட்டாரமாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வட்டாரப் பகுதியும் வாரத்திற்கு ஒருமுறை மருந்து தெளிப்புப் பணி மேற்கொள்ளப்படுகிறது. இந்த ஆண்டு 17 நபர்கள் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர். +ve case எனக் கண்டறியப்பட்ட வீடுகள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் கொசுப்புழு ஒழிப்பு மருந்து ( அபேட் ) தெளித்தல், கொசு ஒழிப்பு புகை மருந்து அடித்து மற்ற நபர்களுக்கு பரவாமல் தடுக்கப்பட்டது. நகரின் அனைத்து தண்ணீர் தொட்டிகள் (Sump) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி (O.H.T.) குடிநீர் சேகரிப்புகள் ( Water Storage Tanks) களிலும் அபேட் எனப்படும் மருந்துக் கரைசல் தெளிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் மலேரியா , டெங்கு நோய் தோன்றாமல் இருக்க தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

**<u>3) மலேரியா நோயைக் கட்டுபடுத்துதல்</u>**

மலேரியா நோயைக் கட்டுப்படுத்தி விரைவில் கண்டறியும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கென நகராட்சி செவிலியர்கள், மகப்பேறு உதவியாள்ாகளைக் கொண்டு இரத்தத் தடவல் சேகரிக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. நகரில் 4 நகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மலேரியா மருத்துவமனை ஆகிய இடங்களிலும் ரத்தத் தடவல் சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது. இந்த ஆண்டு 24317 சேகரிக்கப்பட்டு நோய்க் குறியீடு உள்ள ரத்த தடவல்கள் எதுவும் கண்டறியப்படவில்லை.

+ve case எனக் கண்டறியப்பட்ட வீடுகள், அதன் அருகில் உள்ள வீடுகளில் ரத்தத் தடவல் சேகரித்தல் மற்றும் கொசு ஒழிப்பு புகை மருந்து தெளித்து மற்ற நபர்களுக்கு பரவாமல் தடுக்கப்பட்டது.

4) டெங்கு காய்ச்சல் நோயைக் கட்டுப்படுத்துதல்

தொடர்ந்து காய்ச்சல் கண்டவர்களுக்கு ரத்த மாதிரிகள் எடுக்கப்பட்டு, அவை துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் அலுவலகம், திண்டுக்கல் அவர்களின் ஆய்வுக் கூடத்தில் டெங்கு காய்ச்சல் உறுதி செய்யப்பட்டவர்களின் பட்டியல் பெறப்பட்டு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

இந்த ஆண்டு 50 நபர்கள் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர். +ve case எனக் கண்டறியப்பட்ட வீடுகள், அதன் அருகில் உள்ள வீடுகளில் கொசுப்புழு ஒழிப்பு மருந்து ( அபேட்) தெளித்தல், கொசு ஒழிப்பு புகை மருந்து அடித்து மற்ற நபர்களுக்கு பரவாமல் தடுக்கப்பட்டது.

## 4. மலேரியா நோயைக் குணப்படுத்துதல்

மலேரியா நோய் ரத்தத் தடவல் பரிசோதனை மூலம் உறுதி செய்யப்படுகிறது. இதற்கென மாநகராட்சி கமலா நேரு தாய்சேய் நல மருத்துவமனையில் தனியாக மலேரியா கிளினிக் செயல்பட்டு வருகிறது. உடனுக்குடன் ரத்தத் தடவல் பரிசோதனை செய்து மாத்திரைகள் வழங்கப்படுகிறது.

3 நாட்கள் குளோரோகுயின் மற்றும் 14 நாட்கள் பிரிமாகுயின் மாத்திரைகள் வழங்கும் பணி அந்தந்த மருத்துவ அலுவலர் கண்காணிப்பில் நகராட்சி செவிலியர்கள் மூலம் வழங்கப்பட்டன. மீண்டும் 15 வது நாள் ரத்தப் பரிசோதனை மூலம் காய்ச்சல் இல்லை என்பது உறுதி செய்யப்படுகிறது.

## 5) விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

மாநகரில் மலேரியா நோய் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த சுகாதார ஆய்வாளர்கள் பயிற்சி மாணவர்கள், தனியார் செவிலியர்கள், மற்றும் மலேரியா பிரிவு களப் பணியாளர்களைக் கொண்டு மகளிர் சுய உதவிக் குழுக்கள், காய்ச்சல் கண்டநபர்கள், குடிசைப்பகுதி மக்கள் ஆகியோர்க்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணி சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. தூய மரியன்னை மேல்நிலைப் பள்ளி, நகராட்சி மேல்நிலைப் பள்ளி ஆகிய இடங்களில் கண்காட்சி நடத்தப்பட்டு பள்ளி மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

இவ்விதம் இம்மாநகராட்சியில் நகர்ப்புற மலேரியா ஒழிப்புத் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 26. மருந்தக மருத்துவ அலுவலர்கள்

| | |
|---|---|
| மருந்தக ஆய்வு உதவியாளர்கள் | – |
| சுகாதார ஆய்வர் | 1 |

## 27. பொது சுகாதாரம் (துப்புரவு பணிகள்)

திருமதி எம். அனிதா அவர்கள் அறிக்கையாண்டில் (1.4.2016 முதல் 31.03.2017) மாநகர்நல அலுவலராகப் பணியாற்றி வருகிறார்.

நகரில் நல்ல முறையில் சுகாதாரம் பேணி காக்கப்பட்டது. கீழே கண்ட பணியாளர்களும், சாதனங்களும், பொது துப்புரவுப் பணிக்காக அறிக்கையாண்டில் பயன்படுத்தப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| 1. | பயாலஜிஸ்ட் | – | – |
| 2. | துப்புரவு ஆய்வர்கள் | – | 11 |
| 3. | கொசு ஒழிப்பு பிரிவு துப்புரவு ஆய்வர் | – | 1 |
| 4. | களப்பணி உதவியாளர் | – | 1 |
| 5. | சுகாதாரமேற்பார்வையாளர்கள் | – | 13 |
| 6. | துப்புரவு பணியாளர்கள் | – | 176 |
| 7. | மலேரியா மஸ்தூர்கள் | – | 19 |

| | | | |
|---|---|---|---|
| 8. | லாரி டிரைவர்கள் | – | 14 |
| 9. | டிராக்டர் டிரைவர்கள் | – | – |
| 10. | டிராக்டர் கிளீனர்கள் | – | – |
| 11. | ஜீப் டிரைவர் | – | 1 |
| 12. | உதவியாளர் | – | 1 |
| 13. | இளநிலை உதவியாளர் | – | 1 |
| 14. | அலுவலக உதவியாளர்கள் | – | 2 |
| 15. | ஆவண எழுத்தர் | – | 1 ( காலியாக உள்ளது) |

<u>வாகனங்கள்</u>

| | |
|---|---|
| லாரி | – |
| டிராக்டர் | – |
| டிப்பர் லாரி | 3 |
| ட்ரெயிலர் | – |
| குப்பை வண்டிகள் (டிரை சைக்கிள்) | 270+111 |
| மினி ஆட்டோ | 4 |
| டம்பர் பிளேசர் வாகனம் | 4 |
| ஜே.சி.பி. | 1 |

மாநகரம் 15 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவும் ஒரு துப்புரவு ஆய்வர் கண்காணிப்பில் பொது சுகாதாரம் பராமரிக்கப்பட்டு வருகிறது.

<u>28 துப்புரவு பணியாளர்களின் வாழ்க்கைத் தரம்</u>

துப்புரவு தொழிலாளர்களுக்கு 127 நகராட்சி குடியிருப்புகள் உள்ளது. அவைகளில் துப்புரவு தொழிலாளர்கள் குடியிருக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர். அப்பணியாளர்களுக்கு அரசு வழங்கும் வீட்டு வாடகைப்படி வழங்கப்படுவதில்லை. அவ்வப்போது அரசினரால் நிர்ணயிக்கப்பட்டுள்ள விகிதாச்சார அகவிலைப்படி ஒவ்வொரு தொழிலாளருக்கும் வழங்கப்பட்டு வருகிறது. ஆண்களுக்கு 2 ஜோடி காக்கி சீருடையும், பெண்களுக்கு 2 பாலியஸ்டர் புடவையும் , துப்புரவு பணியாளர் இருபாலருக்கு ஒரு ஜோடி காலணியும் , பாதுகாப்பு உபகரணங்களான முகவுரை, கையுரை கம்பூட்ஸ், ஒளிரும் சட்டை ஆண்டொன்றுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

<u>29. அச்சம், அருவருக்கத்தக்க தொழில்கள்</u>

அறிக்கையாண்டில் அச்சம் அருவருக்கத்தக்க தொழில்கள் உள்ளது. இத் தொழில்களை ஒழுங்கு முறைப்படுத்தி கட்டுப்படுத்த உப விதிகளும் அமுல் படுத்தப்பட்டுள்ளது. கடந்த 3 ஆண்டுகளில் கேட்பு வசூல் நிலுவை விபரம் தரப்படுகிறது.

| வருடம் | | கேட்பு | வசூல் | நிலுவை |
|---|---|---|---|---|
| 2013–2014 | ரூ. | 674201 | 674201 | – |
| 2014–2015 | ரூ. | 741890 | 741890 | – |
| 2015–2016 | ரூ. | 857025 | 857025 | – |

**30 2016–17 உணவு கலப்படம்**

தற்போது இச்சட்டம் உணவு தரக்கட்டுப்பாட்டுத் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதால், மேற்படி ஆய்வர்கள் தற்போது மாநகராட்சி கட்டுப்பாட்டில் இல்லை.

**31. சந்தைகளும், திருவிழாக்களும்**

உள்ளூர் கோவில் நிர்வாகத்தினரால் வழக்கமாக கொண்டாடப்பட்டு வரும் 4 திருவிழாக்களும் கொண்டாடப்பட்டது. இந்த திருவிழாக்களுக்கு சுற்றுப்புற கிராமங்களிலிருந்து பெருமளவில் மக்கள் வந்து கூடினர். அவசர கால மல அறைகளும், சிறுநீர் கழிப்பிடங்களும், தண்ணீர் விநியோகம் போன்ற பொது வசதிகள் வழக்கம் போல் நகராட்சியால் செய்யப்பட்டது. இதற்காக தற்காலிகமாக தனியாக துப்புரவுப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

**32 குடிநீர் விநியோகம்**

**(1) ஆத்துார் காமராஜர் நீர்த்தேக்கத் திட்டம்**

திண்டுக்கல் நகரத்திற்கும், செல்வழி கிராமங்களுக்கும் ஒருங்கிணைந்த குடிநீர் திட்டம் அரசு ஆணை எண்.2927 ம்தேதி 6.12.54ல் ரூ.87.32 லட்சத்திற்கு தொழில் நுட்ப அங்கீகாரம் செய்யப்பட்டது. இத் திட்டம், சென்னை தலைமைபொறியாளர் அவர்களால் பல பகுதிகளாக ரூ.94.25 லட்சத்திற்கு தொழில்நுட்ப அங்கீகாரம் அளிக்கப்பட்டது. இத் திட்டம் திண்டுக்கல் நகருக்கு 26 கி.மீ.தென்மேற்கில் உள்ள தாண்டிக்குடி, கொடைக்கானல் மலையில், நீர் பிடிப்பு பிரதேசத்தில் உள்ள பெரியாறு, கூழையாறு என்ற இரண்டு ஆறுகள் சேர்ந்த குடகனாறு என்ற ஆற்றைக் கட்டுப்படுத்தி நீர்த்தேக்கம், ஆத்துார் என்னுமிடத்தில் உள்ளது. இந்நீர் தேக்கம் 158.79 மில்லியன் கன அடி கொள்ளளவு உள்ளதாகவும், இது சுமார் 12 மாதங்களுக்கு திண்டுக்கல் நகருக்கும், செல்வழி கிராமங்களான கீழ்க்கண்ட கிராமங்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

1.ஆத்துார்
2.சின்னாளபட்டி
3.பித்தைளைபட்டி
4.வக்கம்பட்டி
5.பிள்ளையார் நத்தம்
6.பெரிய பள்ளபட்டி

இத்திட்டம் 1962ம் வருடம் முதல் அமுலாகி தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நீரேற்று நிலையம் 1962ம் ஆண்டு நகராட்சியில் ஒப்படைக்கப்பட்டு நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

நீர்த் தேக்கத்திலிருந்து தண்ணீர் 18 அங்குலம் விட்டமுள்ள இரும்பு குழாய்கள் மூலம் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு வந்து வடிகட்டி, சுத்திகரிக்கப்பட்டு நீர்த்தேக்க தொட்டியில் சேமித்த பின்பு இங்கிருந்து 170 குதிரைத் திறன் உள்ள நீர் உந்து இயந்திரத்தின் மூலம் 22 கி.மீ. தொலைவில் உள்ள திண்டுக்கல் நகரில் பல பாகங்களுக்கு பகிர்மானக் குழாய்கள் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. உயரமான பகுதிகளுக்கு மலைக் கோட்டையில் அமைக்கப்பட்டுள்ள நீர் உந்து நிலையத்திலிருந்து 40 குதிரை திறனுள்ள நீர்

உந்து இயந்திரம் நகரில் உள்ள நீர்த்தேக்க தொட்டிக்கு எடுத்துச் சென்று நகரில் பல பாகங்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

தற்போது ஆத்துூர் நீரேற்று நிலையத்திலும், மலைக்கோட்டை நீரேற்று நிலையத்திலும் போதுமான பங்கீட்டிலிருந்து மின்சாரம் பெறப்படுகிறது. செம்பட்டி துணை மின் நிலையத்திலிருந்து ஆத்துார் தலைமை நீரேற்று நிலையத்திற்கு 2.545 லட்சம் செலவில் நேரடி மின் பாதை அமைக்கப்பட்டுள்ளது.

இதைத் தவிர தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள கிணறுகள் 10 திறந்தவெளிக் கிணறுகள் மற்றும் 10 போர்வெல் அமைக்கப்பட்டு இதன் மூலம் வறட்சி காலங்களில் தண்ணீர் எடுக்கப்பட்டு வருகின்றது. .

**(2) பேரணை குடிநீர்த் திட்டம்**

மேலும், திண்டுக்கல் நகரில் விநியோகிக்கப்படும் குடிநீரை அபிவிருத்தி செய்யும் பொருட்டு, கடந்த 1990ம் ஆண்டு முதல் வைகை ஆற்று நீரை ஆதாரமாகக் கொண்டு பேரணை கூடுதல் குடிநீர் திட்டம் ஒன்று ரூ.897.20 இலட்சத்தில் முடிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேற்படி இத்திட்டத்திலிருந்து நாள் ஒன்றுக்கு தற்போது 75 இலட்சம் லிட்டர்கள் குடிநீர் உந்தப்பட்டு, மேற்படி திட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட 17 செல்வழி கிராமங்களுக்கு 19 இலட்சம் லிட்டர்கள் குடிநீர் போக, நகருக்கு 56 இலட்சம் லிட்டர்கள் குடிநீர் பெறப்பட்டு , 1. ரவுண்டு ரோடு புதுார் 2. நாகல் நகர் (3) குள்ளனம்பட்டி மேல்நிலை தொட்டியில் ஏற்றப்பட்டு விநியோகம் செய்யப்பட்டது. தற்போது இத்திட்டத்தின்கீழ் குடிநீர் ஆதாரம் இல்லாமல் மற்றும் குடிநீர்க் குழாய்கள் பழுதடைந்த நிலையில் உள்ளதால், செயல்படுத்தப்படாமல் இருந்து வருகின்றது.

**குடிநீர் விநியோகிக்கப்படும் செல்வழி கிராமங்கள்:**

1. சித்தர்கள் நத்தம்
2. மல்லையம்பட்டி
3. முசுவனூத்து
4. சொக்குப்பட்டி
5. செங்கோட்டை
6. மைக்கேல் பாளையம்
7. சங்கால் பட்டி
8. ஆச்சிபுரம்
9. கூத்தாம் பட்டி
10. காமுபிள்ளை சத்திரம்
11. திம்ம நாயக்கன் பட்டி
12. பச்சமலையான்கோட்டை
13. செம்பட்டி துணை மின் நிலையம்
14. ஆதிலெட்சுமி புரம்
15. ஆரிய நல்லூர்
16. பஞ்சம்பட்டி

**(3) காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

காவேரி கூட்டுக் குடிநீர் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ரூ.8,50,418 இலட்சம் செலவில் புதுப்பாளையம், ரெங்கநாதன் பேட்டை ஆகிய இடங்களில் இரண்டு உறிஞ்சு கிணறுகள் அமைக்கப்பட்டு 25.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ஆறு சேகரிப்புத் தொட்டிகளில் சேகரம் செய்யப்பட்டு புதுப்பாளையம், வெள்ளையணை,

கூடலூர், பாளையம், குஜிலியம்பாறை, எரியோடு ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள நீர் உந்து நிலையங்களின் மூலம் உந்தப்பட்டு திண்டுக்கல் எம்.வி.எம். நகரில் அமைக்கப்பட்டுள்ள சேகரிப்புத் தொட்டிக்கு பெறப்பட்டு நகரில் புதிதாக அமைக்கப்பட்ட அண்ணா நகர், கொடகனாறு, ஆர்.எம்.காலனி ஆகிய மேல்நிலைத் தொட்டிகளிலும் ஏற்கனவே அமைந்துள்ள 8 மேல்நிலைத் தொட்டிகளின் மூலமும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

திண்டுக்கல் நகருக்கு ஆத்தூர் காமராஜர் சாகர் திட்டத்தின் மூலம் உந்தப்படும் 6.43 எம்.எல்.டி.யில் 0.90 எம்.எல்.டி செல்வழி கிராமங்களுக்கு போக மீதமுள்ள 5.00 எம்.எல்.டி மற்றும் காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் கிடைக்கப் பெறும் சராசரி 10.00 எம்.எல்.டி ஆகமொத்தம் 15.53 எம்.எல்.டி. தண்ணீர் கிடைக்கப் பெறுகின்றது. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 80 லிட்டர் வீதம் விநியோகம் செய்யப்படுகின்றது. பேரணை கூட்டுக் கூடிநீர்த் திட்டத்தில் நீர் உந்தப்படுவதில்லை.

| | | 1.4.2016ல் உள்ளபடி | 31.3.2017ல் உள்ளபடி |
|---|---|---|---|
| 2 | அளவு கருவி குழாய் விகிதம் (வீட்டு பயனுக்கு) | 25783 | 25783 |
| 3 | அளவு கருவி குழாய் விகிதம் (வீட்டு பயனுக்கு அல்லாதவை | 1138 | 1138 |
| | | 26921 | 26921 |

அறிக்கையாண்டில் 26921 குழாய் இணைப்புகள் உள்ளது. வீட்டுக் குழாய் இணைப்புகளுக்கு கீழ்க்கண்ட கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. ஒரு குழாய் இணைப்புக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 46 /– மட்டும் வீட்டு உபயோகம் அல்லாத இணைப்புக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.90/– வசூலிக்கப்பட்டு வருகிறது.

<u>புதிதாக மேற்கொள்ளப்படும் குடிநீர் திட்டங்கள்</u>

<u>(i)குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகள்</u>

இந்நகருக்கு தினசரி குடிநீர் வழங்கும் வகையில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு இணைய நிதி மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி நிதியின் கீழ் ரூ.70.50 கோடி மதிப்பீட்டில் சுமார் 55 ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்ட ஆத்தூர் காமராஜர் நீர்த்தேக்கத் திட்டம் புனரமைப்பு செய்தல், மற்றும் கூடுதல் நீர்த் தேக்கங்களும், புதிதாக பகிர்மான குழாய்கள் அமைக்க திட்டமிடப்பட்டு 95 சதவீதப் பணிகள் முடிக்கப்பட்டு ஆகஸ்ட் 2017ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

<u>(ii) கூடுதல் நீர்த்தேக்கம் அமைக்கும் பணி</u>

ஆத்தூர் காமராஜர் சாகர் அணையின் நிர்த்தேக்க கொள்ளளவை அதிகரிக்கும் பொருட்டு கூடுதல் அணை கட்டுவதற்காக உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதியின் கீழ் ரூ. 20.00 கோடி மதிப்பீட்டில் கூடுதலாக 714 மில்லியன் லிட்டர் குடிநீர் சேகரிக்கும் பணிக்கு 22.01.2016ல் வேலை உத்திரவு வழங்கப்பட்டு 50 சதவீதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணியானது டிசம்பர் 2017ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 33) அளவு கருவி விகிதம்

வீட்டு உபயோகத்திற்கு உபயோகப்படும் இனங்களுக்கு 1000 லிட்டர் அதன் பாகத்திற்கு ரூ.8.00, வீட்டு பயனல்லாத இனங்களுக்கு 1000 லிட்டர் மற்றும் அதன் பாகத்திற்கு ரூ.15.00 வீதம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

குழாய் விகிதாச்சார கட்டணத் தலைப்பின் கீழ் மற்றும் அளவு மானிய முறை தண்ணீர் கட்டணத் தலைப்பின் கீழ் வரப்பெற்றுள்ள ஆண்டு வருமான விபரம்.

| ஆண்டு | வருமானம் |
|---|---|
| 2013–2014 | ரூ.1,45,19,478/– |
| 2014–2015 | ரூ.1,70,91,149 /– |
| 2015–2016 | ரூ. 1,72,82,146/– |

### 34. பொது நலமும் தற்காப்பும்

அரசினர் தீயணைப்பு நிலையம் ஒன்று தீயணைக்கும் துறையின் பொறுப்பில் இயங்கி வருகின்றது.

### 35. பயன் தரும் மரங்கள் மூலம் வருமானம்

பயன்தரும் மரங்கள் மூலம் அறிக்கையாண்டில் வருமானம் ரூ. 5600

### 36 சந்தைகள்

நகரில் 6 பொது சந்தைகள் உள்ளது. இவற்றில் ஒன்று வாரச் சந்தை, மற்றவை நாளங்காடிகள். தனியார் சந்தை ஒன்றும் இல்லை. இந்த சந்தைகள் மூலம் ஒவ்வொரு பகுதி மக்களும் நல்ல பயன் அடைந்துள்ளனர்.

1) முனியப்பன் கோவில் தெரு , தினசரி காய்கறி சந்தை (நாகல்நகர்)
2) தெற்கு ரதவீதி தினசரி காய்கறி சந்தை
3) பேகம்பூர் தினசரி காய்கறி சந்தை
4) காந்தி மைதானம் தினசரி காய்கறி சந்தை
5) வாரச்சந்தை

<u>கடந்த 3 ஆண்டு வருமானம் பின்வருமாறு</u>

| | |
|---|---|
| 2013–2014 | ரூ. 16,07,150 |
| 2014–2015 | ரூ. 19,35,158 |
| 2015–2016 | ரூ. 22,07,038 |

## 38 பேருந்து நிலையம்

நகர்புற ஒருங்கிணைப்பு திட்டத்தின் கீழ் புதிய பேருந்து நிலைய கட்டுமானம் 3 நிலையாக கட்ட உத்தேசிக்கப்பட்டு முதல் நிலை கட்டுமானம் 11 பேருந்து நிறுத்தும் இடத்துடன் 39 கடைகளும், அதன் மேல் முதல் மாடி தங்கும் அறைகளுடன் பிரயாணிகள் தங்கும் அறைகளுடன் கட்டி முடிக்கப்பட்டு பேரூந்து நிலையம் உபயோகத்தில் உள்ளது.

இரண்டாம் நிலையில், சைவ, அசைவ உணவு சிற்றுண்டிச்சாலை கட்டிடம் 18 கடைகள், 18 பேரூந்துகள் நிற்குமிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கடைகளும், உணவு விடுதியும் குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

மாநகராட்சி பேருந்து நிலையத்தில் ஒரு பேரூந்துக்கு ரூ.15/– வீதம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் ஏலம் விடப்பட்டுள்ளது. இதன் மூலம் அறிக்கையாண்டில் கிடைத்த வருமானம் ரூ.29,30,905/– பேருந்து நிலையத்திற்கு நாள்தோறும் சுமார் 646 பேருந்துகள், வந்து செல்கிறது. பேருந்து நிலையத்தின் மூன்றாம் நிலை கட்டுமான பணிகள் பகுதி 1, மற்றும் பகுதி 2 , கட்டிடங்கள் முறையே ரூ.18 லட்சம், ரூ.14.50 லட்சம் நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதியும் பெறப்பட்டு கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதில் 26 பேருந்துகள் நிற்பதற்கும், 13 கடைகள் மற்றும் ஆண், பெண்களுக்கென தனித்தனியே ஒரு கழிப்பிடமும், பொருட்கள் வைப்பதற்க ஒரு அறையும், ஆண்கள் தங்கும் அறை மற்றும் பெண்கள் தங்கும் அறை ஒன்றும் கட்டப்பட்டு பணிகள் முடிவுற்றன. அவை அனைத்தும் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. பேருந்து நிலையத்தின் வடபுறம் 54 கடைகள் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

## 39 ஆடு வதைச் சாலை

ஆடு வதைச் சாலை ஒன்று மட்டும் உள்ளது. கட்டணம் வசூலிக்கும் பணி பொது ஏலம் விடப்பட்டு ஒப்பந்தக்காரர் வசம் ஒப்படைக்கப்பட்டு கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. ஆடு ஒன்றுக்கு ரூ.35.00/– வீதம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

கடந்த 3 ஆண்டுகளில் இத்தலைபபின் கீழ் வரப்பெற்ற வருமானம்

| | |
|---|---|
| 2013–2014 | ரூ.10,53,112/ |
| 2014–2015 | ரூ11,83,878 |
| 2015–2016 | ரூ.12,00,116 |

## 40. பழத் தோட்டம்

மாநகராட்சி மூலம் பழத் தோட்டம் எதுவும் பராமரிக்கப்படவில்லை.

## நகரமைப்பு பிரிவு, நகரமைப்பு பிரிவு அபிவிருத்தித் திட்டம்

அறிக்கையாண்டில் 1.4.2016 முதல் 31.3.2017 முடிய திரு.மா.அ.பழனியப்பன் அவர்கள் நகரமைப்பு அலுவலராக பணியாற்றி உள்ளார்கள்.

இப்பிரிவில் அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட அலுவலர்கள் பணியாற்றி வருகின்றனர்.

| | |
|---|---|
| முதுநிலை நகரமைப்பு அலுவலர் | 1 |
| உதவி செயற்பொறியளார்(திட்டம்) | 1 |
| நகரமைப்பு ஆய்வர்கள் | 2 |
| இளநிலை பொறியாளர் | 3 |
| உதவியாளர் | 1 |
| இளநிலை உதவியாளர்கள் | 2 |
| அலுவலக உதவியாளர்கள் | 4 |

அறிக்கையாண்டில் 139 கட்டிட விண்ணப்பங்கள் பெறப்பட்டது. அதன் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 101 விண்ணப்பத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது, 136 விண்ணப்பங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. 372 அனுமதியற்ற கட்டுமானங்கள் மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு நீதி மன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டு அவ்வப்போது அகற்றப்பட்டுள்ளது. கட்டிட விண்ணப்பங்களுக்கு உரிமையாணைத் தொகை ரூ.29,31,821/ அறிக்கையாண்டில் வசூல் செய்யப்பட்டது. அரசாணை எண் 59/25.7.06 மற்றும் அரசாணை எண்.244 நாள்.5.12.2008 உத்திரவுப்படி நடப்பாண்டில் ஏதும் மனைப்பிரிவுகள் முறைப்படுத்தப்படவிலலை.

## நகரமைப்பு திட்டம் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்டம்

1. திண்டுக்கல் மேற்கு விரிவு அபிவிருத்தித் திட்டம் பரப்பளவு ஏக்கர் 58 ஏக்கர், 1340 ச.அடி. அரசாணை எண்.1824, பி.எச், .நாள்:17.5.1998 ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

2. சௌராஷ்டிராபுரம் விரிவு அபிவிருத்தித் திட்டம் பரப்பளவு 15.44 ஹெக்டேர் அரசாணை எண்.3798, பி.எச்., நாள்: 2.3.1942 ல் அங்கீகரிக்கப்பட்டது .

3. பாறைக்குளம் விரிவு அபிவிருத்தித் திட்டம் பரப்பளவு 60 ஏக்கர் .13279 ச.அடி அரசாணை எண்.760, பி.எச். நாள்:2.3.1942ல் அங்கீகரிக்கப்பட்டது .

4. அரண்மனைக் குளம் விரிவு அபிவிருத்தித் திட்டம் பரப்பளவு 8.252.5 ஹெக்டேர். அரசாணை எண்.737 பி.எச். நாள்:27.2.1942ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

5. திருவள்ளுவர் நகரமைப்புத் திட்டம் பரப்பளவு 72 ஏக்கர் 1476 ச.அடி அரசாணை எண்.1877, நாள்: 10.9.73ல் அங்கீகரிக்கப்பட்டது. ( சீராய்வு செய்யப்பட்டுள்ள இத்திட்டம் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது செயல்முறைகள் எண். 3411/2009/ டிபி2, நாள் 17.3.2010ல் இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

6. பாலகிருஷ்ணாபுரம், ரேஸ்கோர்ஸ் நகரமைப்புத் திட்டம் பாகம் 1 பரப்பளவில் 113 ஏக்கர் 30276 ச.அடி அரசாணை எண்.2458, நாள்: 15.12.1969ல் அங்கீகரிக்கப்பட்டது. ( சீராய்வு செய்யப்பட்டுள்ள இத்திட்டம் இணக்கம் பெறுவதற்காக 10.10.2011.ல் மீள சமர்ப்பிக்கப்பட்டுள்ளது)

7. போடிநாயக்கன்பட்டி விரிவு அபிவிருத்தித் திட்டம் பரப்பளவு ஏக்கர் 128 – 23622 ச.அடி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் ந.க.எண்.33160/1978/டி2, நாள்:5.2.1980ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

8. பாரதிபுரம் விரிவு அபிவிருத்தித் திட்டம் பரப்பளவு 64.10 ஹெக்டேர். நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் 18.3.80 நாளிட்ட ந.க.எண்.13553/79 கடிதத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

9. மேட்டுப்பட்டி விரிவு அபிவிருத்தித் திட்டம் பரப்பளவு 56.70 ஹெக்டேர். நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின்ந.க.எண்.13554/72, / டி2. நாள்:19.12.79.ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (சீராய்வு செய்யப்பட்டுள்ள இத்திட்டத்திற்கு நகர் ஊரமைப்பு துறை இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் எண். 7583/2005/டிபி2, நாள் 12.2.07ல் இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது

10. மலைக்கோட்டை பகுதி விரிவு அபிவிருத்தித் திட்டம் பரப்பளவு 52.44 ஹெக்டேர். நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் ந.க.எண்.18362/79டி2 நாள்:5.2.1980ல் அங்கீகரிக்கப்பட்டுள்து.

11. பென்சனர் தெரு வடக்கு விரிவு அபிவிருத்தித் திட்டம் பரப்பளவு 40 ஹெக்டேர். நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் நக.எண்.15474/77எப்3,நாள்:4.8.78ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (சீராய்வு செய்யப்பட்டுள்ள இத்திட்டத்திற்கு நகர் ஊரமைப்பு துறை இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் எண். 4588/2004/டிபி2, நாள் 26.3.07ல் இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது

12. காந்திஜி விரிவு அபிவிருத்தித் திட்டம் – பரப்பளவு 122 ஏக்கர். 21172 ச.அடி நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் ந.க.எண்.13552/79/டி2, நாள்:5.2.1980ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ( சீராய்வு செய்யப்பட்டுள்ள இத்திட்டம் 7.12.2011ல் இணக்கம் அளிக்கப்பட்டுள்ளது

13. பாலகிருஷ்ணாபுரம், ரேஸ்கோர்ஸ் நகராமைப்புத் திட்டம் பாகம் 2 – பரப்பளவு 187 ஏக்கர் 39290 ச.அடி . நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் ந.க.எண்.20887/84–டி2, நாள்: 30.3.1986 கடிதத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

14. பூச்சிநாயக்கன் பட்டி நகரமைப்புத் திட்டம் – பரப்பளவு 41.01 ஹெக்டேர். இத்திட்டம் இணக்கம் பெறப்பட்டது.

15. மீனாட்சி நாயக்கன்பட்டி 1059 விரிவு அபிவிருத்தித் திட்டம் – பரப்பளவு 68.39 ஹெக்டேர். நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் ந.க.எண். 1059/2003/டிபி2, நாள் 10.2.2011ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது ( வரைபட எண். டிடிபி.(எம்.ஆர்) ( டிசிபி எண் 2 / 2011 )

திண்டுக்கல் முழுமைத் திட்டம் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் அரசாணை எண்.122, நாள்:16.4.1998ல் இணக்கம் அளிக்கப்பட்டு இதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் அரசாணை எண். எம்எஸ்.759, நாள்:1.9.93ன்படி திண்டுக்கல் உள்ளூர் திட்டக் குழுமத் தலைவராக திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் உறுப்பினர் செயலராக நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களும் நியமிக்கப்பட்டு, உள்ளூர் திட்டக் குழுமம் சம்பந்தப்பட்ட கோப்புகள் விரிவு அபிவிருத்தித் திட்டம் சம்பந்தப்பட்ட கோப்புகள் அனைத்தும் 8.9.1993ம் நாள் உள்ளூர் திட்டக் குழும உறுப்பினர் செயலர் வசம் ஒப்படைக்கப்பட்டு விட்டன. உள்ளூர் திட்டக் குழுமத் திட்டம் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த அனைத்து நடவடிக்கைளும் தற்போது திண்டுக்கல் உள்ளூர் திட்டக் குழுமத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் திருத்தியமைக்கப்பட்ட திண்டுக்கல் முழுமைத் திட்டம் அரசாணை எண் 327, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நாள் 24.7.2011ல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசாணை (எம்.எஸ்) எண்.759, நாள்:1.9.93ன்படி கட்டிட அனுமதி உள்ளூர் திட்டக் குழுமத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட பிறகு நகராட்சியால் உரிமையாணை வழங்கப்பட்டு வந்தது. தற்பொழுது உள்ளூர் திட்டக் குழுவின் தலைவராக உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 3.11.99 மற்றும் 15.11.99ம் தேதிய உத்திரவுகளின்படி உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் கடிதம் ந.க.எண்.241/99, டி.எல்.பி.எ.(3) , நாள்: 4.1.2000ல் 200 ச.மீ. பரப்பளவு உள்ள குடியிருப்பு வீடுகளுக்கு நகராட்சி ஆணையரே கட்டிட அனுமதி வழங்கலாம் என்றும், குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கும், உள்ளூர் திட்டக் குழுமத்தால் ஒப்புதல் அளிக்கப்பட வேண்டுமெனவும் அதிகாரம் வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 9862/2010/பிஏ1, நாள் 17.2.2011 உத்திரவில் குடியிருப்பு உபயோக கட்டிடங்களுக்கு தரைத்தளம் , முதல்தளம் மற்றும் இரண்டாம் தளத்தில் 4000 சதுரடி பரப்பளவில் நான்கு குடியிருப்புகளும், வணிக உபயோக கட்டிடங்களுக்கு தரைத்தளம் மற்றும் முதல் தளத்தில் 2000 சதுரடி பரப்பளவில் கட்டிடம் கட்டுவதற்கும் நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 49.ன்கீழ் திட்ட அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வழங்குவதற்கு அனைத்து உள்ளாட்சிகளுக்கும் அதிகாரப் பகிர்வு அளிக்கப்பட்டுள்ளது.

மேலும் புதிய விரிவு அபிவிருத்தி திட்ட விதி 8 (viii ) – ஒரு குடியிருப்புக்கு மேல் 15(i) – மனை உட்பிரிவு / ஒருங்கிணைப்பு / ஒப்புதல் மனைப்பிரிவு விதி (5) – ஒரு குடியிருப்புக்கு மேல், அதிகார வரம்பிற்கள் திட்ட அனுமதி வழங்கப்படும். உத்தேசங்களுக்கு மேற்காணும் விதிகளை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி தளர்த்துவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாடு நகராட்சி கட்டிட விதி 6 (i) நிறைவு செய்யும் வகையில் மனை உட்பிரிவு மனைப்பிரிவு நிபந்தனை 3.ஐ தளர்த்தி அனுமதி வழங்கவும், மனையிடத்தில் அமையும் நிலையில் உள்ள கட்டிடங்கள் மற்றும் உத்தேசக் கட்டிடங்களுக்கு மேற்படி அதிகார பகிர்வுக்கு உட்பட்டு அனுமதி வழங்கவும், மேற்படி சுற்றறிக்கையில் அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டு, தற்போது அதன்படி நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது

## 41. வருவாய் பிரிவு

அறிக்கையாண்டில் கீழ்க்கண்ட பணியாளர்கள் பணியாற்றுகிறார்கள்

| | |
|---|---|
| உதவி வருவாய் அலுவலர் (பொ) | 1 |
| வருவாய் உதவியாளர்கள் | 12 |
| உதவியாளர்கள் | 2 |
| இளநிலை உதவியாளர்கள் | 4 |
| அலுவலக உதவியாளர்கள் | 1 |

அறிக்கையாண்டில் வருவாய் பிரிவு பணியாளர்களுக்கான செலவுத் தொகை ரூ 90,35,707 /– சென்ற ஆண்டில் செலவு ரூ. 88,66,234/–

கீழ்க்கண்ட விகிதப்படி ஆண்டு வாடகை மதிப்பில் அரையாண்டிற்கு சொத்துவரி விதிக்கப்பட்டு வருகிறது.

| | |
|---|---|
| பொதுக் காரியங்களுக்கு | 9.19 |
| தண்ணீர் மற்றும் சாக்கடை வரி | 4.00 |
| கல்வி வரி | 2.50 |
| | 15.69 % |

என்ற விகிதப்படி சொத்துவரி வசூலிக்கப்பட்டு வருகிறது. நூலக வரியாக சொத்து வரியில் ஒரு ரூபாய்க்கு 0.10 பைசாவாக வசூலிக்கப்பட்டு வருகிறது.

## சொத்து வரி 2016–17

அறிக்கையாண்டில் சொத்துவரி கேட்பு வசூல் விபரம் கீழே தரப்பட்டுள்ளது

**கேட்பு ( லட்சத்தில்)**

| நிலுவை | நடப்பு | மொத்தம் |
|---|---|---|
| 502.16 | 829.08 | 1331.24 |

**வசூல் ( லட்சத்தில்)**

| நிலுவை | நடப்பு | மொத்தம் |
|---|---|---|
| 91.91 | 688.39 | 780.30 |

**நிலுவை ( லட்சத்தில்)**

| நிலுவை | நடப்பு | மொத்தம் |
|---|---|---|
| 368.39 | 134.06 | 502.45 |

**வசூல் சதவீதம்**

| நிவை | கேட்பு | மொத்தம் |
|---|---|---|
| 29.66 சதவீதம் | 83.83 சதவீதம் | 63,40 சதவீதம் |

## தொழில் வரி

அறிக்கையாண்டில் 3183 நபர்களுக்கு தொழில் வரி விதிக்கப்பட்டுள்ளது.

| கேட்பு | வசூல் | நிலுவை |
|---|---|---|
| 184.89 | 127.87 | 57.02 |

## வரியில்லா இனங்களில் 2013–2014 . ம் ஆண்டிற்கு

## 2016–2017 ம் ஆண்டின் மொத்த கடைகளின் எண்ணிக்கை 798 ஆகும்

| | | |
|---|---|---|
| 1. | காந்தி மார்க்கெட் .. | 352 |
| 2. | பூ மார்க்கெட் அண்ணா வணிகம் | 127 |
| 3. | பேருந்து நிலையம் | 132 |
| 4. | பங்காளி மார்க்கெட் | 19 |
| 5. | கிழக்கு ரதவீதி | 6 |
| 6. | மெயின் ரோடு | 3 |
| 7. | மேற்கு ரதவீதி கடை | 39 |
| 8. | அலுவலக மேல்புற கடை | 27 |
| 9 | அண்ணா வணிக மையக் கடைகள் | 69 |
| 10. | கோட்டைக்குளம் ரோட்டில் உள்ள கடைகள் | 21 |
| 11. | பழனி ரோடு | 3 |
| | ---- | |
| | | 798 |

இதன் மூலம் 2016–2017 ம் ஆண்டில் கிடைத்த வருமானம் ரூ. 1,17,37,253 /–

2016–2017ம் ஆண்டில் மொத்த கடைகளின்எண்ணிக்கை 798 ஆகும் இதன் மூலம் கிடைத்த வருவாய் ரூ.1,17,37,253/– 2016–2017.ம் ஆண்டில் ஏலம் விட்ட குத்தகை இனங்களின் மூலம் கிடைத்த வருவாய் ரூ.100.07 லட்சம். வரியினம் மற்றும் வரியில்லா இனம் ஆகிய இனங்களில் நிலுவையின்றி வசூல் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மனையடி வரி அதன் சதுரடி அளவில் விதிக்கப்படுகிறது. அரசின் நிலங்கள் மனையடி வரியிலிருந்து விலக்கிற்குரியது. விளைநிலம் தவிர, காலிமனைக்கு மனையடி நிலங்களின் பெயரில் அதன் சதுரடி கிரய மதிப்பில் ஏ, பி, சி மண்டலங்கள் முறையே 0.20, 0.15 மற்றும் 0.10 பைசா வீதம் விதிக்கப்படுகிறது. பொது காரியங்களுக்கான வரி விகிதாச்சாரத்தில் ரூ.1. 00க்கு 0.10 பைசாவீதம் நூலக வரியும் விதிக்கப்பட்டுள்ளது. நூலக வரி முழு ரூபாய்க்கு 0. 10 பைசா வீதம் வசூலிக்கப்படுகிறது.

நூலக வரியாக அறிக்கையாண்டில் ரூ 49,22,778/– வசூலிக்கப்பட்டுள்ள்து.

## 42. கணக்குகள்

2015 – 2016ம் அறிக்கையாண்டில் ஆரம்ப கையிருப்பு ரூ. 10,09,22,150 / – ம் முடிவு கையிருப்பு ரூ. 3,27,12,140/ – ம் இருந்தது.

**கடன்கள்**

அறிக்கையாண்டில் கடன் தொகை பெறப்படவில்லை. எல்லாக் கடன்களும் சேர்த்து 31.3.2017முடிய அசல் மட்டும் ரூ 7, 71,64,345 ./– செலுத்தப்பட்டுள்ளது. அறிக்கையாண்டின் இறுதியில் நிலுவையாக இருந்த கடன் தொகை ரூ.43,83,22,653/– ஆகும். அதன் விபரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| அரசு | ரூ. | – |
| பாதாள சாக்கடைத் திட்டம் | ரூ. | 7,84,80,002,00 |
| ஐ.யு.டி.பி . | ரூ. | 31,72,651.70 |
| jica` | ரூ. | 21,15,00,000.00 |
| காவேரி திட்டம் | ரூ. | 14,51,70,000.00 |
| மொத்தம் | ரூ. | 43,83,22,653.70 |

**.தணிக்கை**

| | | |
|---|---|---|
| 1.4.2015 ல் நிலுவையாக உள்ள தணிக்கை தடைகள் எண்ணிக்கை | –– | 2992 |
| அறிக்கையாண்டில் பெறப்பட்டது | – | 386 |
| மொத்தம் | – | 3378 |
| அறிக்கையாண்டில் நிவர்த்தி செய்யப்பட்டது | – | 323 |
| ஆண்டு இறுதியில் நிலுவையிலுள்ளது 31.03.2017 | –– | 3055 |

விரைவில் தணிக்கைத் துறையினருடன் கூட்டமைப்பு நடத்தி தணிக்கைத் தடைகள் நிவர்த்திக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**கொடி நாள்**

2015 – 2016ம் ஆண்டுக்கு திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் இந் நகராட்சிக்கு கொடிநாள குறியீடு 6.69 லட்சமாகும். அறிக்கையாண்டில் ரூ.3.19 லட்சம் மட்டும் வசூல் செய்யப்பட்டது. இது மொத்த குறியீட்டுக்கு 50% சதவீதமாகும்.

**அறக்கட்டளை**

இத் தலைப்பின் கீழ் நிதிக் கணக்கு இல்லை.

**பொது**

மேயர், துணை மேயர், நகர்மன்றத் துணைத் தலைவர், மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோருடன் ஆணையர் நல்லுறவு நிலவியது. மேயர், அவர்களின் சீரிய முயற்சியால் நகரின் பல்வேறு அபிவிருத்தி பணிகளும், சீரான குடிநீர் விநியோகம் மற்றும் இதர பணிகளும் ஒருமித்த கருத்தோடு செய்து முடிக்கப்பட்டது.

ஆணையர் மற்றும் பிரிவு அலுவலர்களிடையே நேசமும் நல்லுறவும் நிலவியது. மாநகராட்சி பொறியாளர், மாநகர் நல அலுவலர், மாநகரமைப்பு அலுவலர், கண்காணிப்பாளர், உதவி வருவாய் அலுவலர்(பொ), மற்றும் அனைத்து பிரிவு பணியாளர்களின் பூர்ண ஒத்துழைப்பு இருந்தது. அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கின்றேன்.

ஆணையர்
திண்டுக்கல் மாநகராட்சி